தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.06.2013 A.M**

---

## விவசாயத்தைக் கைவிட்ட 8.67 லட்சம் தமிழக விவசாயிகள்: புள்ளி விவரம் தரும் அதிர்ச்சித் தகவல்



2001 மற்றும் 2011-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் மட்டும் 8 லட்சத்து 67 ஆயிரத்து 582 தமிழக விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டுள்ளனர்.

2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்த அதிர்ச்சிகரமான புள்ளி விவரம் தெரிய வந்துள்ளது.

கடந்த 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 51 லட்சத்து 16 ஆயிரத்து 39 விவசாயிகள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் 2011-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் தமிழக விவசாயிகளின் எண்ணிக்கை 42 லட்சத்து 48 ஆயிரத்து 457 ஆகக் குறைந்துள்ளது. மாறாக விவசாயக் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2001-ஆம் ஆண்டில் 86 லட்சத்து 37 ஆயிரத்து 630 ஆக இருந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2011-ஆம் ஆண்டில் 96 லட்சத்து 6 ஆயிரத்து 547 என

அதிகரித்துள்ளது. அதாவது பத்தாண்டுகளில் புதிதாக 9 லட்சத்து 68 ஆயிரத்து 917 விவசாயக் கூலிகள் உருவாகியுள்ளனர்.

நகரமயமான கிராமங்கள்: இதே காலகட்டத்தில் தமிழ்நாட்டின் மொத்த கிராமங்களில் 338 கிராமங்கள் மறைந்து நகரங்களாக மாறியதும், மாறாக தமிழ்நாட்டின் நகரப் பகுதிகள் 832-ல் இருந்து 1,097 ஆக அதிகரித்துள்ளதும் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

விவசாயம் என்பது நஷ்டம் தரக் கூடிய தொழிலாக நீடிப்பது. விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காதது. நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் போன்றவற்றால் விவசாய சாகுபடி பரப்பு குறைந்து வருவது என பல காரணங்களால், விவசாயத் தொழிலை கைவிடும் விவசாயிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இது குறித்து பெண்கள் இணைப்புக் குழு என்ற அமைப்பின் மாநிலத் தலைவியும், சமூக ஆர்வலருமான ஷீலு கூறியது:

இந்தியா ஒரு விவசாய நாடு என்கிறோம். ஆனால் விவசாயத் தொழிலைக் காப்பாற்றுவதற்கான கொள்கை இந்திய அரசிடம் இல்லை. தேவையின்றி ஏராளமான மக்கள் விவசாயத் தொழிலை சார்ந்துள்ளதாகவும், தற்போது விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள மொத்த மக்கள் சக்தியில் 75 சதவீதத்தை மாற்றுத் தொழில்களை நோக்கித் திருப்ப வேண்டிய அவசியம் உள்ளதாகவும் நமது பிரதமரே அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்.

இதற்கேற்பவே மத்திய அரசின் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் போன்றவற்றுக்காக லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய விளை நிலங்களை அரசே ஆர்ஜிதம் செய்து, தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைத்துள்ளது. ரியல் எஸ்டேட் தொழில் ஊக்குவிக்கப்பட்டு, விளை நிலங்களில் பெரும்பகுதி மனைகளாக மாற்றப்படுகின்றன.

சாகுபடிக்குப் போதுமான தண்ணீர் கிடைக்காதது போன்ற இயற்கை இடர்பாடுகளைத் தவிர அரசின் இதுபோன்ற கொள்கைகள் காரணமாகவும் நெருக்கடிகள் அதிகரித்துக் கொண்டே வருவதால், விவசாயத்தையே கைவிட வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். இது எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்கிறார் ஷீலு.

காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் நலச் சங்க பொதுச் செயலாளர் மன்னார்குடி எஸ்.ரங்கநாதன் கூறும்போது, விவசாயத்தில் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே கொண்டு

தங்கள் சொந்தக் காலில் விவசாயிகள் நிற்கும் நிலை தற்போது இல்லை. மற்றவர்களைப் போல விவசாயிகளும் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு தாங்களே விலை நிர்ணயம் செய்யும் நிலை ஏற்பட்டால், விவசாயத் தொழிலின் மீதான நம்பிக்கையும் அதிகரிக்கும் என்றார்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

கடலூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக மேமாத்தூரில் 20 மி.மீ. மழை பதிவாகியது.

தமிழகத்தில் மக்களை வாட்டிய அக்னி நட்சத்திரம் 2 நாட்களுக்கு முன்பு விடைபெற்ற நிலையில் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக கடந்த 3 நாட்களாக கடலூர் மாவட்டத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. கடலூர் துறைமுகத்தில் புதன்கிழமை 1-ஆம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது.

கடலூரில் புதன்கிழமை பகலில் 104 டிகிரி வெயில் அடித்தது, ஆனால் மாலையில் திடீரென லேசான மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்தது. இந்த நிலையில் வியாழக்கிழமை வெயில் அளவு 98.24 டிகிரியாக குறைந்தது. பகலில் வெயில் அடித்தாலும் வானம் கரு மேகத்துடன் காணப்பட்டது. ஆனால் லேசான தூறல் மட்டுமே பெய்தது.

மாவட்டத்தில் அதிகபட்சமாக மேமாத்தூரில் 20 மி.மீ. மழை பெய்தது. மேலும் கீழ்செருவாயில் 5 மி.மீ., காட்டுமன்னார்கோவிலில் 3 மி.மீ., பெலாந்துறையில் 3 மி.மீ. மழை பதிவானது.

## கரும்பு விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாததால் சர்க்கரை ஆலையை அரசு ஏற்று நடத்த எம்.எல்.ஏ. வலியுறுத்தல்

சிவகங்கை மாவட்டத்தில் ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை பணம் பட்டுவாடா செய்யாததால், ஆலையை அரசே ஏற்று நடத்த வேண்டும். நிதிநிலை குறித்து பகிரங்க அறிக்கையை மாவட்ட நிர்வாகத்திடம் ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, வரும் ஜூன் 10ஆம் தேதி சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துவது என கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை வகித்து சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன் பேசியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வரும், தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளிடம் பிடித்தம் செய்த கடன் தொகையை வங்கிகளிடம் செலுத்தவில்லை. இதனால் கரும்பு விவசாயிகள் புதிய பயிர்க்கடன் பெற முடியவில்லை. அதேபோல் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகையையும் ஆலை நிர்வாகம் வழங்கவில்லை.விவசாயிகளுக்கும், வங்கிக்கும் ஆலை நிர்வாகம் மொத்தம் ரூ.60கோடி வரை வழங்க வேண்டியுள்ளது. கரும்பு வெட்டும் போதே, விவசாயிகளுக்கு 85சதவீதம் பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் அந்த உத்தரவை ஆலை நிர்வாகம் நிறைவேற்றவில்லை.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை இல்லை. தொடர்ந்து இதே நிலை நீடித்து வருவதால் வரும் ஜூன் 10ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த வேண்டும் என்றார்.

கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் பாஸ்கரன் அம்பலம் முன்னிலை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கலையரசன், கரும்பு விவசாயிகள் சங்க துணைத் தலைவர் உடையப்பன், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மகேந்திரன், மாயழகு, முனியாண்டி குமார், சசிக்குமார், முன்னாள் தலைவர் தமிழரசன், ஊராட்சி தலைவர் செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மதுரையில் மழை

மதுரையில் வெள்ளிக்கிழமை காலை வெயில் வாட்டியபோதும் மாலையில் பெய்த கன மழையால் வெப்பம் தணிந்தது.

வெள்ளிக்கிழமை காலை வெயில் வாட்டி வதைத்தது. மாலையில் மேகம் சூழ்ந்து மழை பெய்தது. மதுரை நகர் பகுதிகளில் கனமழை பெய்ததால் சாலைகளில் நீர் தேங்கி, போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மாவட்ட அளவில் பரவலாக மழை பெய்துள்ளது. வியாழக்கிழமை பெய்த மழை அளவு வருமாறு: மதுரை-48, மேட்டுப்பட்டி-25, கள்ளந்திரி-22, சிட்டம்பட்டி-45, புலிப்பட்டி-55, மேலூர்-15, தனியாமங்கலம்-62, இடையபட்டி-19, விரகனூர்-18.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 30.05 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 30.05 அடியாக உள்ளது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 93 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.17 டி.எம்.சி

### வேலூரில் இடியுடன் மழை

வேலூர் மாநகரில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த இடியுடன் கூடிய மழை பெய்தது. இதனால், நகரில் முக்கிய சாலைகளில் தண்ணீர் வெள்ளம்போல ஓடியது.

இந்த மழையையடுத்து நகரில் சிறிதுநேரம் மின்தடை ஏற்பட்டது. பெரிய அளவிலான பேனர்கள் காற்றில் சரிந்து விழுந்தன.

புதிய பஸ் நிலையம், பழைய பஸ் நிலையம் மற்றும் தொரப்பாடி சாலையில் வாகனப் போக்குவரத்து மழையால் சீர்குலைந்தது.

மாவட்டத்தில் வியாழக்கிழமையும் பரவலாக மழை பெய்தது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் ஆலங்காயத்தில் அதிகபட்சமாக 83.2 மி.மீட்டர் மழையும், குறைந்த அளவாக வேலூரில் 0.3 மி.மீட்டரும் பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை (மி.மீட்டரில்): வாணியம்பாடி 2.5, வாலாஜாபேட்டை 1, திருப்பத்தூர் 4.1.

அரக்கோணம்

அரக்கோணம் நகரில் வெள்ளிக்கிழமை மாலை பலத்த இடியுடன் கூடிய மழை சுமார் 2 மணி நேரம் பெய்தது.

மாலையில் மழை பெய்யத் தொடங்கிய நிலையில், மோசூர் சாலையில் உள்ள மின்மாற்றி வெடித்தது. இதனால் நகரில் மின்தடை ஏற்பட்டது. சுமார் 4 மணி நேரம் கழித்து, நகரின் ஒரு பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

மற்றொரு பகுதிக்கு மின்சாரம் வழங்கத் துரித சீரமைப்புப் பணிகளில் மின்வாரிய ஊழியர்கள் ஈடுபட்டனர்.

### பண்ணைப் பள்ளி விவசாயிகளுக்குப் பயிற்சி

செய்யாறை அடுத்த பல்லி கிராமத்தில் பண்ணைப் பள்ளி விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆத்மா திட்டம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சியில், தொழில்நுட்ப வல்லுநர்கள் பாலராயன், அக்ரிவிஷன் விஜயகுமார் ஆகியோர் திருந்திய நெல் சாகுபடி, நேரடி நெல் விதைப்பு முறைகள் குறித்து தெரிவித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, ஆத்மா வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் மணிகண்டன்,

தனஞ்செயன், தமிழ்ச்செல்வி ஆகியோர் நேரடி பண்ணை பள்ளி மூலம் விவசாயிகளுக்கு செயல் விளக்கமாகப் பயிற்சி அளித்தனர்.

இப்பயிற்சியில் பங்கேற்ற 25 விவசாயிகளுக்கு கிட் பேக் மற்றும் தொழில்நுட்ப கையேடுகள் வழங்கப்பட்டன. இதேபோல், கீழ்புதுப்பாக்கம் கிராமத்திலும் பண்ணைப் பள்ளி சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## ராசிபுரத்தில் மழை: மக்கள் மகிழ்ச்சி

ராசிபுரம் பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் முடிவடைந்த நிலையில், ராசிபுரம் பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை நல்ல மழை பெய்தது.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பெய்த மழையால் நகரில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

நகரில் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வழிந்தோடியது.

இதனால், குளிர்ச்சியான தட்ப வெப்பநிலை நிலவியது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு பெய்த இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 18.70 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 18.70 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 49 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500

கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## குமரி மாவட்டத்தில் பரவலாக மழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் பரவலாக மழை பெய்தது.

இம் மாவட்டத்தில் வறட்சி நீடித்து வந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை நிலவரப்படி பேச்சிப்பாறையில் 5 மி.மீ., பெருஞ்சாணியில் 3 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இந்த மழை தொடர்ந்தால் நிலத்தடி நீர் ஊற்று ஏற்படும். விவசாயிகள் கன்னிப்பூ சாகுபடியை தொடங்க வாய்ப்பு ஏற்படும். தண்ணீர் தட்டுப்பாடு குறைய வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

களியக்காவிளை: வெள்ளிக்கிழமை காலை முதல் களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளில் வானம் மழை மேகம் சூழ்ந்து காணப்பட்டது. மாலை 6 மணியளவில் பலத்த மழை பெய்தது. படந்தாலுமூடு, அதங்கோடு, மடிச்சல், குழித்துறை, மேக்கோடு, மலையடி, தையாலுமூடு உள்ளிட்ட பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

குலசேகரம்:குலசேகரம் சுற்று வட்டார பகுதிகளிலும், அணை பகுதிகளிலும் வெள்ளிக்கிழமை பரவலாக மழை பெய்தது. இப் பகுதிகளில் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சியான கால நிலை நிலவியது. பிற்பகல் முதல் தொடர்ந்து மழை பெய்தது.

இம் மாவட்டத்தில் சாலைகளை  தாற்காலிமாக சீரமைக்கும் வகையில் கடந்த இரு நாள்களாக நெடுஞ்சாலைத் துறையினர் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மழைக்காலம் தொடங்கியுள்ளதால், இந்தச் சீரமைப்பு மீண்டும் சேதமடையும் வாய்ப்புள்ளது. எனவே, வருங்காலங்களில் மழைக்காலம் தொடங்கும் முன்பு சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

01.06.2013 A.M

---

## தஞ்சையில் மழையால் மக்கள் "குஷி'

தஞ்சாவூர்: தஞ்சையில் வாட்டிய கத்திரி வெய்யிலின் கடுமையும், வெப்பமும் தணிந்து, கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த 2 மாதத்துக்கும் மேல் வெய்யில் கடுமையாக வாட்டியது. இதனால், மக்கள் சாலையில் நடமாட முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். தஞ்சை நகரத்தின் வீதிகளில் டூவீலர்களில் செல்வோர், பாதசாரிகள் பெரும் அவதிப்பட்டனர்.தஞ்சை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. தஞ்சையில் நேற்றும், நேற்று முன்தினமும் மாலை நான்கு முதல் இரவு வரை விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால், நகர மக்கள் வெம்மையிலிருந்து விடுபட்டு குளிர்ச்சியான சீதோஷ்ண நிலையை அனுபவித்து, மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். நேற்றுக்காலை 8 மணி வரை பெய்த மழையளவு பகுதி வாரியாக மி.மீட்டரில் பதிவு விபரம் வருமாறு:பூதலூர் 11.8 மி.மீ., தஞ்சை 13.2, கோரையாறு 9.0, நெய்வாசல் தென்பாதி 1.4, முல்லையார் 32.2, பாண்டவையாறு 28.6, வலங்கைமான் 11.2, நன்னிலம் 50.3, திருவையாறு 3.0, திருக்காட்டுப்பள்ளி 4.2, குடவாசல் 68.2 மி.மீ., பதிவானது. திருவாரூர் 16.0, நீடாமங்கலம் 12.8., மன்னார்குடி 32, திருத்துறைப்பூண்டி 41.0, முத்துப்பேட்டை 66.2 மி.மீ., மற்றும் தலைஞாயிறு 10.2 மி.மீ., மழையளவு பதிவாகியிருந்தது.

தற்போதைய மழையால் குறுவை நெல் சாகுபடியை மேற்கொள்ள முடியும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், தஞ்சை சுற்றுவட்டார கிராமப்புற விவசாயிகளும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கயிறு தயாரிக்க பயிற்சி

திண்டுக்கல்:பிள்ளையார்பட்டியில், மத்திய அரசின் கீழ் இயங்கும் கயிறு வாரியத்தின் மண்டல விரிவாக்க மையம் சார்பில் ஜூலை 1 முதல் ஆறுமாத கால கயிறு ஆர்டிசன் பயிற்சி நடக்கிறது.

எழுத படிக்கத் தெரிந்த ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பங்கள் அனுப்பலாம். மாதம் ரூ.750 உதவித்தொகை வழங்கப்படும், விடுதி வசதி உண்டு. விண்ணப்ப படிவங்களை நேரில் அல்லது கடிதம் மூலமாகவோ தஞ்சாவூர் வல்லம் வழியில், மண்டல விரிவாக்க மையத்தில் உள்ள கயிறு வாரிய அலுவலகத்தில் நேரில், கடிதம் மூலம் இலவசமாக பெறலாம்.

இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் வரும் ஜூன் 17க்குள் அலுவலகத்தில் சேர வேண்டும்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதிகோபால்சாமி எம்.எம்.ஏ., வழங்கினார்

தளவாய்புரம்:கிருஷ்ணாபும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கான வறட்சி நிவாரண தொகையை, கோபால்சாமி எம்.எம்.ஏ., வழங்கினார்.அவர் பேசுகையில், ""வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரண தொகை வழங்க, தமிழக முதல்வர் உத்தரவிட்டார்.அதன்படி கிருஷ்ணாபுரம், சோலைசேரி, ஜமீன்,அயன் கொல்லங்கொண்டான் கிராமங்களை சேர்ந்த 690 விவசாயிகளுக்கு ,20லட்சத்து 14ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது,"என்றார். முகவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உட்பட்ட பகுதியில், 510 பேருக்கு 12லட்சத்து 70ஆயிரம் 710ரூபாய் வறட்சி நிவாரண நிதியை, எம்.எல்,ஏ., வழங்கினார். கூட்டுறவு வங்கி செயலாளர் நாராயணன், முகவூர் வங்கி செயலாளர் சுந்தரவேலு, சங்க தலைவர் அழகுநம்பி, துணைத் தலைவர் ஜெயராஜ். முகவூர் வங்கி தலைவர் பெரியாண்டவர், துணைத் தலைவர் பவுண்ராஜ் மற்றும் இயக்குனர்கள். ஊராட்சி தலைவர் நம்பிராஜன், ஒன்றிய கவுன்சிலர்கள் பெரியாண்டனர், தவம்பெற்றாள், பொன்னுலட்சுமி, எம்.ஜி.ஆர் மன்றத்தை சேர்ந்த பாண்டியன், பிள்ளையார். பொட்டல்பட்டி ராஜேந்திரன் கலந்து கொண்டனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு ரூ.210 கோடி கலெக்டர் உத்தரவுப்படி வழங்கல்

ஈரோடு: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கலெக்டர் பிறப்பித்த உத்தரவுப்படி, கரும்பு விவசாயிகளுக்கு, 85 சதவீத பணப்பற்றான, 210 கோடி ரூபாயை, சக்தி சர்க்கரை ஆலை வழங்கியுள்ளதாக, வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.ஈரோடு கலெக்டர் அலுவகலத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் டி.ஆர்.ஓ., கணேஷ் தலைமையில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.கரும்பு விவசாயிகள் சங்கம் சாமியப்பன்: சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம், 110 நாட்களாக கரும்புக்கான பணத்தை வழங்கவில்லை. கலெக்டர் உத்தரவை மதிக்கவில்லை.

நிலுவை தொகை, 200 கோடியை தாண்டியுள்ளது.மத்திய அரசு லெவியை நீக்கியுள்ள நிலையில், பணத்தை வழங்குவது எப்போது, என்றார்.சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர்: கரும்பு விவசாயிகளுக்கு மே, 18ம் தேதி வரையிலுமாக, 234 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது.2013ம் ஆண்டு ஃபிப்ரவரி, 7ம் தேதி வரை விவசாயிகளுக்கான நிலுவையில், 199 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். வங்கியில் வாங்கிய பயிர்கடன், 12 கோடி ரூபாயும் சேர்த்து மொத்தம், 210 கோடி ரூபாய்செலுத்தியுள்ளோம்.ஆப்பக்கூடல், மெடக்குறிச்சி ஆலை விவசாயிகளுக்கு, 65 கோடி ரூபாய், வங்கி பயிர் கடன், 34 கோடி என மொத்தம், 99 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. ஒரு மாதத்தில் முற்றிலுமாக வழங்கப்படும்.கரும்பு விவசாயிகள் சங்கம் சாமியப்பன்: விவசாயிகளின் பணத்தை வழங்காமல், வெளிமாநிலத்தில் இருந்து கரும்பை, 1,500 டன் வரையிலும் கொள்முதல் செய்து வருகின்றனர்.வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி: கலெக்டர் உத்தரவுப்படி, ஆலையின் பணப்பற்றில், 85 சதவீதம் விவசாயிகளுக்கும், 15 சதவீதம் ஆலை செயல்பாட்டுக்கும் பயன்படுத்தி வருகின்றனர். வாரந்தோறும் ஆலையின் வரவு, செலவை கணக்கு காட்டி வருகின்றனர்.இதன்படி ஒரு மாதத்தில் விவசாயிகளின் நிலுவை வழங்கப்படும், என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர், எனக்கூறினார்.

## விவசாயிகளுக்கு நிவாரணம்

ராஜபாளையம்:ராஜபாளையம் சம்மந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணத்தை, கோபால்சாமி எம்.எல்.ஏ., வழங்கினார். சம்மந்தபுரம், வடக்கு வெங்காநல்லூர், மேலப்பாட்ட கரிசல்குளம் பகுதிகளை சேர்ந்த 662 பேருக்கு, 36 லட்சத்து 79ஆயிரத்து 220 ரூபாய் வழங்கப்பட்டது. சங்க தலைவர் காளிராஜ் குமார் தலைமை வகித்தார். செயலாளர் கிருஷ்ண மூர்த்தி முன்னிலை வகித்தார். சங்க துணைத்தலைவர் பாலசுப்பிரமணியன், அ.தி.மு.க., நகர் செயலாளர் பாஸ்கரன், கவுன்சிலர்கள் கதிரேசன், ராதா கிருஷ்ணன், மீனாட்சி சுந்தரம், தொழிலதிபர் சம்சுதீன் மற்றும் இயக்குனர்கள் கலந்துகொண்டனர்.

## ஏற்காடு கோடை விழா மலர் கண்காட்சி கோலாகலம்

சேலம்: ஏற்காடு, 38வது கோடை விழா மலர் கண்காட்சி நேற்று கோலாகலமாக துவங்கியது.கலெக்டர் மகரபூஷணம் தலைமை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செந்தூர்பாண்டியன், வேளாண் துறை அமைச்சர் தாமோதரன், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி, சுற்றுலாத்துறை முதன்மை செயலாளர் கண்ணன் ஆகியோர், குத்துவிளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தனர்.மலர் கண்காட்சியில், ஏராளமானோர் கலந்து

கொள்வர் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சொற்ப அளவிலேயே மக்கள் வந்திருந்தனர். சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில், மயிலாட்டம், ஒயிலாட்டம், கட்டக்காலாட்டம், மேள, தாள நிகழ்ச்சிகள் நடந்தது. அண்ணா பூங்காவில் நடந்த மலர் கண்காட்சியில், 25 ஆயிரம் ரோஜா மலர்கள் மூலம் உருவாக்கப்பட்ட சிங்க உருவம், 1,500 கார்வேஷன், 5,000 ஜெர்பிரா, 500 அந்தோரியம் மலர் மூலம் உருவாக்கப்பட்ட மயில், 20 ஆயிரம் ரோஜா மலர் மூலம் உருவாக்கப்பட்ட, ஆறு அடி உயர, "டோரா புஜ்ஜி' பொம்மை ஆகியவை, பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.மலர் கண்காட்சியில் ரோஜா, ஜெர்பிரா, அந்தோரியம், கார்வேஷன், ஆர்கிட்ஸ், டெய்சி, லிமோனியம், லில்லியம் உள்பட, 250 வகையான மலர்கள், 2,000 பூந்தொட்டிகளில் அழகுபட அணிவகுத்து வைக்கப்பட்டு இருந்தது. 2 டன் எடையில் அன்னாசி, பலா, பப்பாளி, பூசணி என, பலவகை காய்கறி, கனிகளை கொண்டு, அலங்கார வளைவு வைக்கப்பட்டு இருந்தது.ஒரு டன் எடையிலான கேரட், பீட்ரூட் மூலம் யானை உருவம் காய்கறி கண்காட்சியில் இடம் பெற்று இருந்தது. "கிளாஸ் ஹவுசிஸில்' போன்சாய் வகை சேர்ந்த மரங்கள், அரிய வகை காய்கறி, பழங்கள் இடம் பெற்று இருந்தன.மான் பூங்கா, ரோஸ்கார்டன், பொட்டானிக்கல் கார்டன், லேடீஸ் சிட், ஜென்ஸ் சிட், பக்கோடா பாயின்ட், தலைச்சோலை, சேர்வராயன் மலைக்கோவில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில், சுற்றுலாப்பயணிகள் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.மாவட்ட எஸ்.பி., திவேல் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. மலைபாதையில் போலீஸார் கண்காணிப்பு மற்றும் போக்குவரத்து சீரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். கோடை விழா முதல் நாளான நேற்று சுற்றுலா பயணிகள் வருகை குறைவால், ஒரு வழி பாதை திட்டம் கைவிடப்பட்டு, வாகனங்கள் வழக்கம் போல, சென்று வந்தன.ஏற்காடு அரங்கில் இன்னிசை கச்சேரியும், பல்துறை சார்பில் அரசு திட்ட சாதனை விளக்க முகாமில் திரளாக பொதுமக்கள் கலந்து கொண்டனர். கோடை விழா நேற்று கோலாகலமாக துவங்கிய நிலையில், இன்றும், நாளையும் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.06.2013 A.M**

---

## மலர் கண்காட்சியுடன் ஏற்காடு கோடை விழா கோலாகலமாக துவக்கம்



சேலம்: சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 38வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நேற்று துவங்கியது. பல்வேறு ரக மலர்கள் காட்சிக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளன. 2 டன் காய்கறி, பழங்களால் ஆன அலங்கார நுழைவு வளைவு அமைக்கப்பட்டுள்ளது. 25 ஆயிரம் ரோஜாக்களால் ஆன சிங்கம், 20 ஆயிரம் மலர்களால் 6 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள டோரா பொம்மை, 15 ஆயிரம் கார்னேசன், 5 ஆயிரம் ஜெர்பிரா, 500 அந்தூரியம் மலர்களால் ஆன மயில் ஆகியவை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.அந்தூரியம், ஜெர்பிரா, ரோஜா, ஆர்கிட் என 250 வகையான மலர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 15 ஆயிரம் சதுர அடியில் புல் தரை அமைக்கப்பட்டுள்ளது. கோடை விழாவையொட்டி குறவன் குறத்தி நடனம், தப்பாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தது.முன்னதாக துவக்க நிகழ்ச்சிக்கு மகரபூஷணம் தலைமை வகித்தார். அமைச்சர்கள் செந்தூர் பாண்டியன், இடைப்பாடி பழனிச்சாமி, தாமோதரன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தனர். விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் கலந்து கொண்டனர்.இன்று குதிரை சவாரி:

ஏற்காடு கோடை விழா நேற்று துவங்கி 3 நாட்கள் நடக்கிறது. தினமும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. விழவில் இன்று பல்வேறு போட்டிகள் நடக்கிறது. கொழு, கொழு குழந்தைகள் போட்டி, குதிரை சவாரி போட்டி, புகைப்பட போட்டி, படகு போட்டி ஆகியவை நடத்தப்படுகிறது. கோடை விழாவையொட்டி போலீசார், தீயணைப்பு படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்

திண்டுக்கல், : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். டிஆர்ஓ மனோகரன், வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் முன்னிலை வகித்தனர். நேர்முக உதவியாளர் (வேளாண்) கார்த்திகேயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்ததாவது:

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வறட்சி நிவாரண உதவித்தொகையில் முறைகேடு நடைபெற்றுள்ளது. எரியோடு, கோவிலூர், கோம்பேறிபட்டி, புளியம்பட்டி, மத்தனம்பட்டி உள்ளிட்ட இடங்களில் 1200 விவசாயிகளில் 560 விவசாயிகளுக்கு மட்டுமே இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

முறையாக கணக்கெடுக்கவும் இல்லை. மத்தனம்பட்டியில் ஒரு விவசாயிக்கு ரூ.72 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேடசந்தூர் தாலுகா அலுவலகத்திற்கு புகார் கொடுக்கச் சென்றோம்.

ஜமாபந்தி நடந்ததால் முடிந்ததும் பார்க்கிறோம் என்று அதிகாரிகள் தட்டிக்கழித்து விட்டனர். கோம்பைபட்டியில் 500 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த கரும்பு பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பயிர்காப்பீடு செய்தும், காப்பீடு தொகை கிடைக்கவில்லை. வறட்சி நிவாரணமும் கிடைக்கவில்லை. எந்த அடிப்படையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அலுவலர்கள் பலரும் விளைநில பகுதிக்குச் செல்லாமலே கணக்கெடுத்துள்ளனர். வேளாண் துறை கணக்கெடுப்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஆய்வு செய்த விபரம் குறித்து விவசாய சங்கங்களுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்த

னர்.

கலெக்டர் வெங்கடாசலம், வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் கூறுகையில், Ôவறட்சி

நிவாரணம் வழங்காதது குறித்து ஆய்வு செய்யப்படும். கரும்பு பயிர் காப்பீட்டுத் தொகை மத்திய அரசிடம் இருந்து வர வேண்டும். காலதாமதமாக இருந்தாலும் கண்டிப்பாக வந்து விடும்Õ என்றனர்.

## கரும்பில் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறை யோசனை

சிவகங்கை, : கரும்பில் தாளைபூத்தல் அல்லது வெளுப்பு நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

கரும்பில் இரும்புசத்து பற்றாக்குறையால் பயிர் வெளுத்து காணப்படும். கால்சியம் அல்லது சுண்ணாம்புசத்து அதிகமுள்ள நிலங்களில் இக்குறைபாடு தென்படுகிறது. நட்ட பயிரைவிட கட்டை பயிரில் இக்குறைபாடு அதிகம் காணப்படும். உவர் களர்நிலத்தில் தேங்கியிருக்கும் உப்புகளின் அளவு அதிகமாக இருப்பதால், இரும்புசத்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் இலையில் நரம்புக்கு இடைப்பட்ட பகுதி பச்சையம் குறைந்து வெளுத்து காணப்படும். பற்றாக்குறை அதிகளவில் இருக்கும்போது இலைகள் வெள்ளையாக மாறி பின்னர் கருகி காய்ந்து விடும்.

வழக்கமாக தாளை பூக்கும் பகுதியில் ஏக்கருக்கு 20 கிலோ அன்னபேதி உப்பு எனப்படும் பெர்ரஸ் சல்பேட்டை அடியுரமாக இடலாம் அல்லது அன்னபேதி உப்பு கரைசலை தோகைகளின் மீது தெளிக்கலாம். அல்லது இரண்டே கால் கிலோ அன்னபேதி உப்புடன் இரண்டே கால் கிலோ நீர்த்த சுண்ணாம்பை 450 லிட்டர் நீரில் கரைத்து நிலத்தில் ஈரம் இருக்கும்போது கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் நன்றாக படும்படி தெளிக்க வேண்டும். செடியின் ஒரு பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கு இரும்புசத்து செல்லும் வேகமும், அளவும் குறைவாக இருப்பதால் செடியின் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

15 நாட்கள் இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை தெளித்தால்தான் இக்குறைபாட்டை நீக்கி நல்ல மகசூல் பெற முடியும். இம்முறையை பின்பற்றி தாளைபூத்தல் எனப்படும் கரும்பில் வெளுப்பு நோயை கட்டுபடுத்தலாம். இவ்வாறு தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

## சொட்டுநீர் பாசன கருவி பயன்பாடு குறித்து பயிற்சி

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் வட்டம் கொடுங்கால் கிராமத்தில் சொட்டு நீர்ப்பாசன விவசாயிகளுக்கு சொட்டு நீர் கருவிகள் பராமரிப்பு குறித்து சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண்மைத்துறை சென்னை சர்க் கரை ஆலை, நாகார்ஜுனா பெர்டிலைசர்ஸ் நிறுவனங்கள்

சார்பில் நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார், சென்னை சர்க்கரை ஆலை (கரும்பு) முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன், நாகார்ஜுனா பெர்டிலைசர்ஸ் மண்டல மேலாளர் தண்டபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் எம்எல்ஏ கோதண்டராமன் வரவேற் றார். சொட்டுநீர்ப் பாசன விவசாயிகள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் பேசும்போது, 10 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் மூலம் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி செய்தால் கரும்புகள் நன்கு வளர்ச்சி அடையும். இந்த சொட்டு நீர் பாசனத்தால் மகசூல் அதிகரிப்பதோடு விவசாயத்திற்கு தேவைப் படும் பாசனநீர், மின்சார செலவு குறைகிறது என்றார். முன்னதாக விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன கருவி பயன்பாடுகள் குறித்து செய்முறை விளக்கமளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் திருமலை, கரும்பு அலுவலர் சசிக்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மறுகணக்கெடுப்பு நடத்தி வறட்சி நிவாரணம் விவசாயிகள் வலியுறுத்தல்

புதுக்கோட்டை, : தமிழக அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரண நிதியை பாரபட்சமின்றி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்க வலியுறுத்தி தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தினர் நேற்று புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் செபஸ்தியான் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி முன்னாள் எம் எல்ஏ ராஜசேகரன், மாவட்டச் செயலாளர் பொன்னுச்சாமி பேசினர். இதில் அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரண நிதி முறையாகவும், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது. எனவே, மாவட்டத்தில் மறுகணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்தினர். மாவட்ட நிர்வாகிகள் ராமசாமி, சின்னையா, வீராச்சாமி, தென்றல் கருப் பையா, அண்ணாச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் காசி, கிருஷ்ணன், சங்கர், ராமநாதன், வீரப்பன், ராஜலிங்கம் கலந்து கொண்டனர்.

## ஊட்டியில் 2 மணி நேரம் கனமழை

ஊட்டி, : ஊட்டியில் நேற்று மாலை சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக கன மழை பெய்தது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது.

ஊட்டி நகரில் நேற்று காலை முதல் மதியம் வரை மேகமூட்டத்துடன் லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து மாலை 3 மணிக்கு துவங்கிய கன மழை சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக கொட்டி தீர்த்தது.

ஊட்டி நகரில் கூட்ஷெட் சாலை, சேரிங்கிராஸ் மற்றும் தாழ்வான பகுதி களில் மழை நீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளானார்கள். மேலும் ஊட்டி படகு இல்லத்திலும் படகு சவாரி நிறுத்தப்பட்டது.  சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர். மழை காரணமாக கடுமையான குளிர் நிலவியதால் சுற்றுலா தளங்களில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் வெகுவாக குறைந்தது.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு: (மி.மீட்டரில்)

குன்னூர் 18.60 மி.மீ., கூடலூர் பஜார் 4.30 மி.மீ., கேத்தி 10.20 மி.மீ., கோத்தகிரி 2.30 மி.மீ., நடுவட்டம் 23 மி.மீ., ஊட்டி 23.10 மி.மீ., கிளன்மார்கன் 10 மி.மீ., தேவாலா 20 மி.மீ.,

**இன்றைய வேளாண் செய்திகள்**

**01.06.2013 A.M**

---

**நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை**

நாமக்கல்,

நாமக்கல் நகரில் நேற்று காலை முதலே வானம், மப்பும் மந்தாரமுமாக காட்சி அளித்தது. பிற்பகலுக்கு மேல் வானத்தில் மேகமூட்டங்கள் கூடியதால் இருண்ட வானிலை நிலவியது. பிற்பகல் 3 மணி அளவில் திடீரென மழை கொட்ட தொடங்கியது. இந்த மழை விட்டு, விட்டு இரவு 8 மணி வரை நீடித்தது.

இதனால் சாலை ஓரங்களிலும், பள்ளமான பகுதிகளிலும் மழைநீர் தேங்கியது. இந்த மழை காரணமாக வெப்பம் தணிந்து, இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

இதேபோல நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம், கந்தம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலும் நேற்று பரவலான மழை காணப்பட்டது.

**பந்தலூர் அருகே காட்டு யானைகள் அட்டகாசத்தால் 400 வாழைகள் சேதம்**

நீலகிரி

பந்தலூர் அருகே காட்டு யானைகள் அட்டகாசத்தால் 400 வாழைகள் சேதம் அடைந்தன.

<u>யானைகள் அட்டகாசம்</u>

நீலகிரி மாவட்டம் பந்தலூர் தாலுகா பாட்டவயல் கல்புரா பகுதியை சேர்ந்தவர்கள் ஜேக்கப். பேபி. இவர்கள் தங்களது விவசாய நிலத்தில் வாழை மற்றும் கருணைக்கிழங்குகள் பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 7 காட்டு யானைகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்தன. அங்கு உள்ள வாழை, கருணை கிழங்குபயிர்களை மிதித்தும், தின்றும் சேதப்படுத்தின.

இதில் 400 வாழைகள், 600 கருணை கிழங்கு செடிகள் அடியோடு நாசம் ஆனது. பின்னர் காட்டு யானைகள் விடிய, விடிய அப்பகுதியில் நின்றிருந்தது. நேற்று காலை அப்பகுதி மக்கள் திரண்டு வந்து காட்டு யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். நீண்ட நேரம் போராட்டத்திற்கு பிறகு யானைகள் அங்கிருந்து சென்றன.

நிவாரணம் வழங்க கோரிக்கை

இதனால் பயிர்களை இழந்த விவசாயிகள் மத்தியில் பெரும் கவலை ஏற்பட்டு உள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட தங்களுக்கு வனத்துறையினர் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து உள்ளனர். இதனிடையே காட்டு யானைகள் அட்ட காசம் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட துறையினர் காட்டு யானைகள் ஊருக்குள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழைந்து விடாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும் என எதிர்பார்க்கப்படுகிறது.